## 5.6 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 1999 – 2000 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூக நலம் (ம) சத்துணவு திட்ட (சந–3) துறை

அரசாணை (நிலை) எண்.176 நாள் : 29.9.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.292 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.4.12.96
2. அரசாணை (நிலை) எண்.329, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.17.11.97
3. அரசாணை (நிலை) எண்.239, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை நாள்.05.11.98

மேலும் படிக்க:

4. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் கடித எண்.1208/ஈ1/தநாமமேதி/நாள்.19.3.99, 31.5.99 மற்றும் 9.6.99

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் ரூ.1440 கோடி செலவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை (மகளிர் திட்டம்) செயல்படுத்தவும், முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 1996–97ஆம் நிதியாண்டில், கீழ்க்காணும் 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது,

1. திருவாரூர்
2. தூத்துக்குடி
3. தர்மபுரி
4. கரூர்
5. மதுரை
6. தேனி
7. திருவள்ளூர்
8. இராமநாதபுரம்
9. சேலம்
10. நாமக்கல்
11. கடலூர்
12. விழுப்புரம்
13. வேலூர் மற்றும்
14. விருதுநகர்

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட திட்டம் ரூ.11.5941 கோடி செலவில் 1997–98ஆம் நிதியாண்டில் நீட்டிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக மேற்கண்ட திட்டம், ஏற்கனவே செயல்படுத்தப்படும் 14 மாவட்டங்களுடன் கூடுதலாக கீழ்காணும் 7 மாவட்டங்களுக்கு ரூ.12 கோடி செலவில் 1998–99ஆம் நிதியாண்டில் நீட்டித்து ஆணையிடப்பட்டது.

1. திருநெல்வேலி
2. திருவண்ணாமலை
3. திருச்சிராப்பள்ளி
4. சிவகங்கை
5. ஈரோடு
6. நீலகிரி மற்றும்
7. புதுக்கோட்டை

4. சட்ட மன்றப் பேரவையில் 17.2.1999 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், மகளிர் திட்டம் பற்றி 1999–2000 ஆண்டில், எஞ்சியுள்ள 7 மாவட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்கள். அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், 1999–2000ஆம் ஆண்டு தொடர்பாக தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் "மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் 17.3.1999 அன்று அறிவித்துள்ளார்கள்.

5. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில் 1999–2000ஆம் நிதியாண்டில், மேற்கண்ட திட்டத்தை ரூ.32.82 கோடி செலவில் ஏற்கனவே உள்ள 21 மாவட்டங்களில் நீட்டிக்கவும், கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் விரிவுபடுத்தவும் வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ரூ.12 கோடியை ஒப்பளிக்கவும் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

1. தஞ்சாவூர்
2. காஞ்சிபுரம்
3. கோயம்புத்தூர்
4. நாகப்பட்டினம்
5. பெரம்பலூர்
6. கன்னியாகுமரி மற்றும்
7. திண்டுக்கல்

மேலும், அவர் ரூ.32.82 கோடி செலவிற்கான விவரங்களைக் கீழ்க்கண்டவாறு தெரிவித்து, ஒப்பளிப்பு செய்யப்படவுள்ள ரூ.12 கோடிக்கும் மேற்பட்ட செலவினத்தை பின்பு கோருவதாகவும் தெரிவித்துள்ளார்கள்:–

| | |
|---|---|
| | ரூ. கோடியில். |
| 1. திட்ட மேலாண்மை பிரிவு :– | |
| 1. பணியாளர் செலவினம் | 0.3528 |
| 2. செயலாக்க செலவினம் | 0.1945 |
| | 0.5473 |
| 2. திட்ட செயலாக்க பிரிவு | |
| 1. பணியாளர் செலவினம் | 4.3515 |
| 2. வாகனம் மற்றும் தளவாடம் | 1.0801 |
| 3. செயலாக்க செலவினம் | 2.0825 |
| | 7.5141 |
| 3. வட்டார அளவிலான பிரிவு | 0.5760 |
| 4. கிராமபுற அளவிலான பிரிவு | 4.3126 |
| 5. பயிற்சி | 18.2500 |
| 6. கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு | 0.3593 |
| 7. தனியார் தொண்டு நிறுவன ஒதுக்கீடு | 0.9362 |
| 8. வணிக நடவடிக்கைகள் | 0.0200 |
| 9. செய்தி, போக்குவரத்து நடவடிக்கைகள் | 0.2500 |
| 10. புதுமை புகுத்துதல் | 0.0500 |
| ஆக கூடுதல் | ரூ.32.8155 |

6. அத்துடன் 16.07.99 அன்று வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதி துறை செயலர் தலைமையில் நடைபெற்ற ஒருங்கணைப்பு கூட்டத்தில், மகளிர் திட்டம் மற்றும் "சுவர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா" திட்டங்களை ஒருங்கணைத்து செயல்படுத்துவது பற்றி ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கூட்டத்தில் "சுவர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா" திட்டத்தில் உள்ள நிதி ஆதாரத்தினை, மாநில நிதியுதவிடன் செயல்படுத்தப்படும் மகளிர் திட்ட தேவைக்கு பயன்படுத்தலாம் எனவும், ஏனெனில் மேற்படி இருதிட்டங்களின் நோக்கங்களுமே ஒரே அடிப்படையில் அமைந்துள்ளதாலும் "சுவர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா" திட்டத்தில் அளிக்கப்படும் ஊக்குவிப்புத் தொகையை மாநில அரசினால் செயல்படுத்தப்படும் மகளிர் திட்டத்தில் உபயோகித்து தமிழ்நாட்டில் கிராமபுறங்களில் ''வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள கிராம மகளிரின்'' வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் நோக்கில், மேற்படி இரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தலாம் என முடிவு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இனிவருங்காலங்களில், இத்திட்டத்தினை செயல்படுத்துகையில் ஏதேனும் நடைமுறை சிக்கல்கள் ஏற்படுமாயின், அதனை செயலர், நிதி மற்றும் வளர்ச்சி ஆணையருடன் கூடி விவாதித்து முடிவு மேற்கொள்வது என்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

## 5. MAHALIR THITTAM

7. மேற்படி பத்தி 5 மற்றம் 6 ல் சொல்லப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து அரசு கீழ்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது:–

அ. 1999–2000ம் நிதியாண்டில், மகளிர் திட்டத்தை ரூ.32.82 கோடி செலவில், ஏற்கனவே உள்ள 21 மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்தவும், தஞ்சாவூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், கன்னியாகுமரி மற்றும் திண்டுக்கள் ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தவும் தற்போது வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.12.00 கோடியை ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்படுகிறது.

ஆ. மேலும், ஒருங்கிணைந்த குழு கூட்டத்தின் முடிவின்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தும் மகளிர் திட்டத்தினையும், மத்திய அரசு மூலம் நடைமுறைபடுத்தப்படும் "சுவர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர்" திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த ஆணையிடப்படுகிறது.

இ. வங்கிகளின் கூட்டமைப்பு கூட்டத்தை கூட்டி, மகளிர் திட்டத்தில் உள்ள பெண்களுக்கு கடன் வரையறை தயாரித்து கடன் வசதி பெற்றுத்தர , தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுக்கவும் ஆணையிடப்படுகிறது.

ஈ. நபார்டு (NABARD), உலக வங்கி (World Bank), ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) ஆகிய வங்கிகளை அணுகி, கடன் வசதி பெற்றுத் தர தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

உ. "சுவர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா" (SGSY) என்ற புதிய திட்டத்தின்கீழ் மகளிர் திட்டத்தின்கீழ் உள்ள பெண்களுக்கு பொருளாதார நடவடிக்கைக்கு மொத்த நிதியிலிருந்து 30% ஊக்குவிப்புத் தொகை (மான்யம்) ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் வழங்க ஆணையிடப்படுகிறது.

ஊ. திட்ட செயலாக்க பதவிக்கு, இன்றியமையா பணியாளர் (Skeletion Staff) மட்டும் நியமனம் செய்தும் தற்பொழுது அருகிலுள்ள மாவட்டங்களிலுள்ள திட்ட மற்றும் உதவி திட்ட அலுவலர்களின் சேவையை பயன்படுத்தி தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்த பின், மற்ற பணியிடங்களை நிரப்ப ஆணையிடப்படுகிறது.

8. மேலே பத்தி 7(ஆ)வில் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.12.00 கோடியை (ரூபாய் பனிரெண்டு கோடி மட்டும்) பெற்று, தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கிட, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட இயக்குநர், சென்னை–5 கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், நிறுவனத்தில் தேவைக்கேற்ப அந்நிதியை பெற்று வழங்கிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. கூடுதல் நிதி தேவைப்படின் தக்க கருத்துருவினை அரசுக்கு ஒப்பளிப்பு வேண்டி அனுப்பவும் 1999–2000ம் நிதியாண்டில் திருத்திய மதிப்பீட்டில் / இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்த்து அரசின் நிதித்துறைக்கு அனுப்பவும், தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. மேற்கண்ட செலவினம், கீழ்கண்ட கணக்கு தலைப்பின்கீழ் வழங்க, அரசு அனுமதியளிக்கிறது:–

"2235 சமூக பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் 103 – மகளிர் நலம் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் LC ஏழை மகளிருக்கான புதிய வேலை வாய்ப்புத் திட்டம் உதவித் தொகைகள் (.தொ.கு.எண்.2235–02–103–LC–1105)

11. இவ்வாணை நிதித்துறையின் அ.ச.கு.எண்.74530/ச.ந./99, நாள்.29.9.99ன்படி வெளியிடப்படுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா.காசிநாதன்**
அரசு செயலாளர்